இல்லை. தற்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லா இடத்திற்கும் அந்த உரிமை இருக்கின்ற தன்மையில் இப்போதே அந்த வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், நலிவுற்றவர்கள் அல்லது சமுதாயத்தில் பிற்பட்டவர்கள் அந்தக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக வீடு கட்டுகின்ற அந்த உரிமையை இப்போதே பெறலாம்.

## குமரி மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகங்கள்

**660—(* வினா எண் 4793)** டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுக வேலையை விரைந்து முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் மேற்கு அலை தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டது. கிழக்கு அலை தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை விரைவில் முடிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி முன்னேற்றம் காலமுறையாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்த சூப்பரின்டென்டிங் என்ஜினியரை மாற்றி விட்டார்கள். அங்கே வேலை நடப்பதாக எனக்குத் தெரிய வில்லை. எந்த ஆண்டில் வேலை முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாகச் சொன்னேன். அடிக்கடி அலுவலர்களை அழைத்துப் பேசி, வேலைகளை விரைவுபடுத்தி முடிக்க வேண்டுமென்று அவர் களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. விரைந்து வேலை நடைபெற்று வருகிறது.

1986 மே 5]

**திரு. செ. இரத்தினவேலு:** பேரவையின் தலைவர் அவர்களே, சின்னமுட்டத்திலே கட்டப்பட்டிருக்கும் மீன்பிடி துறைமுகத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு? அதிலே மத்திய அரசினுடைய பங்கு ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ல் சின்னமுட்டத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்ட ஒப்புதல் அளித்து, அதற்கான அப்போதைய மதிப்பீடு 234 லட்சம் ரூபாய். இதில் 50 சதவீதத்தை மத்திய அரசு ஏற்கிறது. மேற்படி செலவினம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, சின்னமுட்டத்தில் புயல் கடப்பதைக் கருத்தில் கொண்டு, அலை தடுப்புச் சுவரின் உயரத்தை 3 மீட்டரிலிருந்து 5 மீட்டருக்கு உயர்த்தவும் மற்றும் அதன் வடிவமைப்புகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்தியதன் காரணமாக இத்திட்டத்தினுடைய மதிப்பீடு 7 கோடியே 63 லட்சம் என்று கணக்கிடப்பெற்று, திருத்த மதிப்பீடு மத்திய அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் திருத்திய மதிப்பீட்டுக்கு மத்திய மீன் வள கடல் ஓர பொறியியல், நில இயக்குநர் இசைவினைப் பெற்று அனுப்புமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இது இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**661—(*வினா எண் 5534)—திரு. மா. சுந்தரதாஸ் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரபிக்கடலில் தேங்காய்ப்பட்டிணம், இரயிம்மன் துறையில் தாமிரபரணி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) மற்றும் (ஆ):** கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டிணம் என்னுமிடத்தில் மீன்பிடி படகுகள் தங்குமிடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.